**பதிவு அஞ்சல் ஒப்புதல் அத்தாட்சியுடன் .**

**தேசிய நெடுஞ்சாலை**

| | |
|---|---|
| **அனுப்புனர்** | **பெறுநர்** |
| **திரு.வி‌.சரவணசெல்வம், எம். டெக்.,** | **திருவாளர்கள் ஸ்ரீ மாசிலாமணி** |
| கண்காணிப்புப் பொறியாளர் (கூ/பொ) | **கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,** |
| தேசிய நெடுஞ்சாலை, | எண்.71, அரக்கோணம் சாலை, |
| சென்னை-106 | **திருத்தணி** – 631209. |

---

**க.எண்.டி.ஆர்.பி-45/2025-26/இ.வ.அ/தேநெ/ நாள். 02.02.2026**

அய்யா,

**பொருள் :** சென்னை (தே.நெ) வட்டம் – சென்னை (தே.நெ) கோட்டம்- CRIF-2025-26 – திருப்பாச்சூர் – கடம்பத்தூர்-கொண்டஞ்சேரி சாலையில் கி.மீ. 0/0 – 10/0 மற்றும் 11/4 – 12/5ல் வலுப்படுத்துதல் பணி (Job No: TN-CRIF-2025-26-CNI-03)... வேலை உத்தரவு வழங்குதல் தொடர்பாக

**பார்வை :**
1. தங்களது ஒப்பந்தப்புள்ளி நாள். 02.12.2025
2. ஒப்பந்தப்புள்ளி ஆணையம் செ.மு.க.எண்.10/360-29/COMM/Tech Cell/2026. நாள். 28.01.2026..
3. தலைமைப்பொறியாளர் (தே.நெ) , சென்னை அவர்களின் கு .எண்.(சி.ஆர்.10வ) CRIF-2025-26 – CNI-03/ஒப்2/தே.நெ/2026 நாள். 28.01.2026..

***********

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவரது சார்பிலும், மேலே குறிப்பிட்டுள்ள பணிக்கு தங்களால் மதிப்பீட்டு (2025-2026) விலையை விட ஒப்பந்தப்புள்ளி 0.01% க்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.11,49,06,613/- (ரூபாய் பதினோறு கோடியே நாற்பத்து ஒன்பது லட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று பதிமூன்று மட்டும்) (அடிப்படை விலை ரூ. 9,73,78,486/- மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 18% ரூ.1,75,28,127/-) அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்படுகிறது. மேலும், இக்கடிதம் கிடைக்கப் பெற்ற 15 [பதினைந்து] தினங்களுக்குள் இத்துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உடன்படிக்கை செய்ய இவ்வலுவலகத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

(1) தங்களால் ஒப்பந்தப்புள்ளியில் முன்வைப்புத் தொகையான ரூ 5,85,000/-க்கு வங்கி வைப்பு தொகைக்கான ரசீது வடிவத்தில் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துள்ளீர்கள். ஒப்பந்த நிபந்தனைகளின்படி ஒப்பந்த தொகையில் 2% சதவீதம், பிணை வைப்புத் தொகையாக ரூ. 22,99,000/- கோட்டப் பொறியாளர் (தே.நெ.) சென்னை பதவி பெயரில் ஈடுசெய்யப்பட்ட

1. அஞ்சலக தேசிய சேமிப்புப் பத்திரங்கள் (அல்லது)
2. அஞ்சலக வைப்பு தொகைக் கணக்குகள் (அல்லது)
3. முதிர்வடையாக கிஸான் விகாஸ் பத்திரங்கள் (அல்லது)
4. தேசிய மயமாக்கப்பட்ட வங்கி வைப்பு தொகைக்கான ரசீது

46 மாதங்கள் செல்லக் கூடிய எளிதில் மாற்ற முடியாத மேற்குறிப்பிட்டவற்றில் ஏதாவது ஒரு வடிவில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய வடிவில் பிணை வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தபத்திரம் மேற்கொண்ட பின் தங்களால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையினை திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.

(2) உடன்படிக்கையில் கையெழுத்திடும் முன் நடப்பு ஆண்டிற்க்கான வணிகவரி செலுத்தியதற்கான சான்றிதழ் மற்றும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்து உள்ளதற்கான சான்றிதழ்கள் ஆகியவற்றை ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்திட வரும் போது கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| வேலையின் மதிப்பு | தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் பற்றிய விபரம் |
|---|---|
| ரூ. 11,49,06,613/-<br>அடிப்படை விலை ரூ. 9,73,78,486/- சரக்கு மற்றும் சேவை வரி 18% ரூ. 1,75,28,127/- | 1 நபர் பி.இ., பட்ட படிப்பு (அமைப்பியலில்) அல்லது அதற்கு இணையாக பட்ட படிப்புடன் ஒரு வருட முன் அனுபவம் ( அமைப்பியலில் ) மற்றும் 2 நபர் பட்டயப் படிப்பு ( DCE ) 5 வருட முன் அனுபவத்துடன். |

(3) மேற்கண்ட தொழில்நுட்ப உதவியாளர்களின் கல்விச் சான்றிதழ் மற்றும் அத்தாட்சியுடன் கூடிய அன்னாரது புகைப்படம் ஒட்டப்பட்ட நகலையும் இணைத்து மேற்படி வேலைக்கு தொழில் நுட்ப உதவியாளராகப் பணிபுரிய சம்மதம் தெரிவித்து கடிதம் தரப்பட வேண்டும். மேலும் அக்கடிதத்தில் எந்த

ஒரு ஒப்பந்தக்காரருக்கும் யாதொரு பணிக்கும் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரியவில்லை என்ற உறுதி மொழியையும் அளிக்க வேண்டும்.

(4) இந்த உடன்படிக்கை அரசுக்கும் தங்களுக்கும் இடையே உள்ள அடிப்படை உரிமைகளை வழங்கும் பத்திரம் என அறியவும். இந்த உடன்படிக்கையில் முதலில் தாங்கள் கையெழுத்திட்டபின் தமிழ்நாடு ஆளுநருக்காக, கண்காணிப்புப் பொறியாளர்(தே.நெ), வட்டம், சென்னை அவர்கள் கையொப்பமிடுவார்கள். ஒப்பந்த உடன்படிக்கை கண்காணிப்புப் பொறியாளர்(தே.நெ) சென்னை அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்புதான் இப்பணி தங்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும். ஒப்பந்த உடன்படிக்கை ஏற்றுக் கொள்வதற்கு முன் தாங்கள் இப்பணியைச் செய்தால், அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு இத்துறை பொறுப்பேற்காது.

மேற்குறிப்பிட்ட முறையில் தாங்கள் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கையெழுத்திடத் தவறினால் இதுவே இறுதிக் கடிதமாகக் கருதி எஸ்.எஸ்.ஆர்.பி. பி.எஸ்.எஸ். விதி எண் 104/05-ன்-படி இவ்வேலை உத்திரவினை ரத்து செய்வதுடன் ஒப்பந்தப்புள்ளியுடன் தங்களால் இணைக்கப்பட்ட முன்வைப்புத் தொகையினை அரசு கணக்கில் வரவு வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்./- வி.சரவணசெல்வம்
கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) கூ/பொ
சென்னை.

**நகல்**: தலைமைப்பொறியாளர் (தே.நெ) சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

**நகல்**: கோட்டப்பொறியாளர் (தேநெ), சென்னை

Signature Not Verified
Digitally signed by SASIREKHA A
Date: 2026.03.06 15:36:49 IST
Location: eProcure-EPROC